**P5 & P6 BEST COMPANION TO SCORE HIGH IN COMPREHENSIONS**
**தொடக்கநிலை 5 & 6 சிறப்புத் தேர்ச்சிக்கான கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் & சுயவிடைக் கருத்தறிதல் பயிற்சித்தாள்**

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | **கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்** | |
| 1 | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் 1 | 1 - 2 |
| 2 | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் 2 | 3 - 4 |
| 3 | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் 3 | 5 - 6 |
| 4 | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் 4 | 7 - 8 |
| 5 | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் 5 | 9 - 10 |
| 6 | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் 6 | 11 - 12 |
| 7 | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் 7 | 13 - 14 |
| 8 | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் 8 | 15 - 16 |
| 9 | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் 9 | 17 - 18 |
| 10 | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் 10 | 19 - 20 |
| 11 | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் 11 | 21 - 22 |
| 12 | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் 12 | 23 - 24 |
| 13 | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் 13 | 25 - 26 |
| 14 | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் 14 | 27 - 28 |
| 15 | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் 15 | 29 - 30 |
| 16 | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் 16 | 31 - 32 |
| 17 | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் 17 | 33 - 34 |
| 18 | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் 18 | 35 - 36 |
| 19 | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் 19 | 37 - 38 |
| 20 | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் 20 | 39 - 40 |


WORDSMITH
BEYOND LEARNING

| சுயவிடைக் கருத்தறிதல் | | |
|---|---|---|
| 1 | சுயவிடைக் கருத்தறிதல் 1 | 41 - 43 |
| 2 | சுயவிடைக் கருத்தறிதல் 2 | 44 - 46 |
| 3 | சுயவிடைக் கருத்தறிதல் 3 | 47 - 49 |
| 4 | சுயவிடைக் கருத்தறிதல் 4 | 50 - 52 |
| 5 | சுயவிடைக் கருத்தறிதல் 5 | 53 - 55 |
| 6 | சுயவிடைக் கருத்தறிதல் 6 | 56 - 58 |
| 7 | சுயவிடைக் கருத்தறிதல் 7 | 59 - 61 |
| 8 | சுயவிடைக் கருத்தறிதல் 8 | 62 - 64 |
| 9 | சுயவிடைக் கருத்தறிதல் 9 | 65 - 67 |
| 10 | சுயவிடைக் கருத்தறிதல் 10 | 68 - 70 |
| 11 | சுயவிடைக் கருத்தறிதல் 11 | 71 - 73 |
| 12 | சுயவிடைக் கருத்தறிதல் 12 | 74 - 76 |
| 13 | சுயவிடைக் கருத்தறிதல் 13 | 77 - 79 |
| 14 | சுயவிடைக் கருத்தறிதல் 14 | 80 - 82 |
| 15 | சுயவிடைக் கருத்தறிதல் 15 | 83 - 85 |
| 16 | சுயவிடைக் கருத்தறிதல் 16 | 86 - 88 |
| 17 | சுயவிடைக் கருத்தறிதல் 17 | 89 - 91 |
| 18 | சுயவிடைக் கருத்தறிதல் 18 | 92 - 94 |
| 19 | சுயவிடைக் கருத்தறிதல் 19 | 95 - 97 |
| 20 | சுயவிடைக் கருத்தறிதல் 20 | 98 - 100 |
| அருஞ்சொற்பொருள் பட்டியல் | | |
| 1 | சுயவிடைக் கருத்தறிதல் | 101 - 105 |
| விடைத்தாள் | | |
| 1 | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் விடைகள் | 106 - 109 |
| 2 | சுயவிடைக் கருத்தறிதல் விடைகள் | 110 - 115 |


WORDSMITH BEYOND LEARNING

# பொங்கல் தினச் சிறப்பு நிகழ்ச்சி
# பொங்கலோ பொங்கல்!

**நாள்: ஜனவரி 14, 2021**

**இடம்: நியூட்டன் சமூக மன்றம்**

**நேரம்: காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை**



**கோலாட்டம்** - நிறங்கள் தீட்டப்பட்ட கழிகளைத் தாளத்துக்கும் இசைக்கும் ஏற்ப ஒன்றுடன் ஒன்று தட்டிக்கொண்டு ஆடும் ஒரு நாட்டார் கலை

**மயிலாட்டம்** - மயிலின் தோகையை உடையுடன் சேர்த்து, ஒடுக்கியும் விரித்தும் ஆடக்கூடியவாறு தைக்கப்பட்டிருக்கும் உடையை அணிந்து மயிலின் ஆட்டத்தை அல்லது அசைவுகளை ஒத்து ஆடும் ஆட்டம்

**ஒயிலாட்டம்** - ஒரே நிறத் துணியைத் தலையில் கட்டிக்கொண்டு, கையில் ஒரே நிறத்திலான துண்டு ஒன்றை வைத்துக்கொண்டு இசைக்கேற்பத் துண்டுகளை வீசி ஆடும் குழு ஆட்டம்

**வில்லுப்பாட்டு** - வில்லின் துணைகொண்டு பாடப்படும் பாட்டு

**பொய்க்கால் குதிரையாட்டம்** - குதிரைக் கூடு அணிந்து அதன் மேல் சவாரி செய்வது போல் பாங்கு செய்து ஆடப்படும் ஆட்டம்

பொங்கல் வைத்தல், தோரணம் பின்னுதல், கரும்பு கடித்தல்

**நுழைவு இலவசம்**

மூவின மக்களையும் வருக வருக
என வரவேற்கிறோம்!

ஏற்பாடு : சிகரம் கலைக் கலாசாரக் குழு

தொடர்புக்கு : திரு.செல்வம் +65 9333 8888



**Q30 முதல் Q33 வரை இடம்பெற்றுள்ள வினாக்களுக்கு உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. சுயவிடை வினாவிற்கு விளம்பரத்திலிருந்து விடையைக் கண்டறிந்து எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q30 இந்த நிகழ்ச்சியின் நோக்கம் என்ன?

(1) போட்டியில் கலந்துகொண்டு பரிசு பெறுவதற்கு
(2) பாரம்பரியக் கலைகளைக் கற்றுக்கொள்வதற்கு
(3) பொங்கல் வைப்பதைக் கற்றுக்கொள்வதற்கு
(4) பொங்கல் தினத்தைக் கொண்டாடுவதற்கு ( )

Q31 இந்நிகழ்ச்சிக்கான கட்டணம் எவ்வளவு?

(1) 25 வெள்ளி
(2) 10 வெள்ளி
(3) இலவசம்
(4) 5 வெள்ளி ( )

Q32 இந்நிகழ்ச்சி ஏன் மற்ற நிகழ்ச்சியிலிருந்து வேறுபட்டிருக்கிறது?

(1) மூவின மக்கள் கலந்துகொள்வதால்
(2) பாரம்பரிய நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதால்
(3) நுழைவு இலவசம் என்பதால்
(4) அதிக நேரம் நடத்தப்படுவதால் ( )

Q33 நீ பங்குபெற்ற பொங்கல் கொண்டாட்டத்தைப் பற்றி உன் நண்பருக்கு ஒரு குறிப்பு எழுது. (4 மதிப்பெண்கள்)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

WORDSMITH
EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.**

ஒரு **வனத்தில்** தீய குணம் கொண்ட தேள் ஒன்று **வசித்து** வந்தது. ஒரு நாள், தேள் இக்கரையில் இருந்து அக்கரைக்குப் போக வேண்டி இருந்தது. அக்கரைக்குப் போவதற்காக அந்த நீரோடையில் இருக்கும் பெரிய மீன்கள், நண்டு, தவளை போன்றவற்றிடம் தேள் உதவி கேட்டது. ஆனால், அந்தப் **பொல்லாத** தேள் தம்மை கொட்டிவிடும் என்று அவை **மறுத்து** விட்டன.

அந்த நேரத்தில், அவ்வழியே வந்த ஆமை ஒன்றிடம் தேள் உதவி கேட்டது. ஆமையும் அக்கரைக்குச் செல்வதால் தேளுக்கு உதவி செய்ய முற்பட்டது. தேள் ஆமையின் முதுகில் ஏறிக்கொண்டது. ஆமை நீரில் நீந்திச்செல்ல ஆரம்பித்தது. சிறிது தூரம்தான் ஆமை சென்றிருக்கும். அதற்குள் தேளுக்கு ஒரு **சிந்தனை** வந்தது. "நான் பல பேரைக் கொட்டியிருக்கிறேன். அவர்கள் வலியால் **துடித்ததை**யும் பார்த்திருக்கிறேன். ஆனால் நான் ஒரு நாளும் ஆமையைக் கொட்டியதில்லை. இந்த ஆமையைக் கொட்டினால் எப்படித் துடிக்கும்? இதை விட்டால் வேறு **சந்தர்ப்பம்** கிடைக்காது" என்று ஆமையைக் கொட்டிப் பார்க்க நினைத்தது தேள். ஆமையின் முதுகில் கொட்டியது. ஆனால், ஆமை பேசாமல் போய்க்கொண்டிருந்தது. உடனே, தேள் ஆமையைப் பார்த்து, "ஆமையாரே! உமது முதுகு கடினமாக இருக்கிறதே. உமது உடம்பில் வலியே வருவதில்லையா?" என்று கேட்டது.

தேளின் கெட்ட எண்ணத்தைப் புரிந்துகொள்ளாத ஆமை, "எனது முதுகு கடினமான ஓட்டினால் மூடப்பட்டுள்ளது. அதனால், எனக்கு அந்த இடத்தில் வலியே வருவதில்லை. ஆனால் எனது கழுத்துப்பக்கம் **மென்மையாக** இருக்கும். இதில்தான் எனக்கு காயங்களும் வலிகளும் ஏற்படும்" என்று சொன்னது ஆமை.

"ஓகோ! அப்படியா?" என்று கேட்ட தேள், மெதுவாக ஆமையின் கழுத்துப் பகுதியை நோக்கிச் சென்றது. கழுத்தில் இருந்து தலைப்பகுதிக்குச் சென்ற தேள் ஆமையைக் கொட்ட ஆரம்பித்தது. தலையில் ஏதோ குத்தியதால் ஆமை விடுக்கென்று தலையைத் தண்ணீருக்கு உள்ளே இழுத்துக் கொண்டது. தேள் நீரோடையில் விழுந்துவிட்டது. தனக்கு உதவி செய்த ஆமைக்குக் **கேடு விளைவிக்க** நினைத்த தேள் தண்ணீரில் மூழ்கி இறந்தது. ஆமை கரையை நோக்கி நீந்திச் சென்றது.

'கெடுவான் கேடு நினைப்பான்' என்ற பழமொழியின்படி நாம் பிறருக்குத் தீங்கு விளைவிக்க எண்ணம் கொண்டால் நமக்கே தீங்கு விளையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஒருவர் எவ்வித பலனையும் எதிர்பாராமல் நமக்கு உதவி செய்தால், அவர் செய்த உதவியை நாம் வாழ்நாளில் என்றுமே மறக்கலாகாது. அவருக்கு நாம் எப்போதும் நன்றியுடையவராக இருக்க வேண்டும்.





**Q34 முதல் Q40 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (22 மதிப்பெண்கள்)**

Q34 தேள் அக்கரைக்குச் செல்ல யாரிடம் முதலில் உதவி கேட்டது? (2 ம)

________________________________________

________________________________________

Q35 மற்ற விலங்குகள் தேளுக்கு உதவி செய்யாததன் காரணம் என்ன? (3 ம)

________________________________________

________________________________________

________________________________________

Q36 தேள் ஆமையைக் கொட்டியதன் காரணம் என்ன? (3 ம)

________________________________________

________________________________________

________________________________________

Q37 தேள் கொட்டும் போது ஆமை எவ்வாறு தன்னைப் பாதுகாத்துக் கொண்டது? (3 ம)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

WORDSMITH BEYOND LEARNING EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG

Q38 தேள் எவ்வாறு இறந்தது? (4 ம)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q39 '**கெடுவான் கேடு நினைப்பான்**' என்ற பழமொழி எதனை உணர்த்துகிறது? (3 ம)

______________________________________________

______________________________________________

______________________________________________

Q40 நமக்கு நன்மை செய்பவர்களுக்கு நாம் தீமை செய்வதைப் பற்றி உன் **தோழிக்கு** ஒரு குறிப்பு எழுது. (4 ம)

அன்புள்ள சீதா

நமக்கு நன்மை செய்பவர்களுக்கு ______________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

இப்படிக்கு
உன் தோழி

WORDSMITH BEYOND LEARNING EQ SKILLS JUMP GRADES + ACHIEVE BIG

**தொடக்கநிலை 5 & 6 சிறப்புத் தேர்ச்சிக்கான**
**கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் & சுயவிடைக் கருத்தறிதல்**

## அருஞ்சொற்பொருள் - சுயவிடைக் கருத்தறிதல்

### சுயவிடைக் கருத்தறிதல் 1

1. வனத்தில் - காட்டில் (Jungle / Forest)
2. வசித்து - தங்கி (Living)
3. பொல்லாத - தீய (Bad)
4. மறுத்து - தவிர்த்து (Denied)
5. சிந்தனை - யோசனை (Thought)
6. துடித்ததை - கஷ்டப்படுவதை (Struggle)
7. சந்தர்ப்பம் - வாய்ப்பு (Opportunity)
8. மென்மையாக - இலேசாக (Soft)
9. கேடு - தீங்கு (Harm)
10. விளைவிக்க - ஏற்படுத்த (Causing)

### சுயவிடைக் கருத்தறிதல் 2

1. கண்டதும் - பார்த்ததும் (Saw)
2. வலிமையானவன் - பலமானவன் (Strong person)
3. துளைத்து - தோண்டி (Dig)
4. வீண் - தேவையற்ற (Unnecessary)
5. வீழ்த்தியிருக்கிறேன் - தோற்கடித்துள்ளேன் (Defeated)
6. தம்பட்டம் அடித்து - தற்பெருமையாக பேசி (Blow one's own trumpet)
7. கடப்பது - தாண்டுவது (Cross)
8. எளிதாக - சுலபமாக (Easy)
9. நிச்சயம் - உறுதி (Definitely)

### சுயவிடைக் கருத்தறிதல் 3

1. நிராகரித்து - மறுத்து (Rejected)
2. இரைதேடி - உணவு தேடி (Finding Food)
3. எள்ளி நகைத்தது - கேலி செய்தது (Deride)
4. வாடி - சோர்ந்து (Tired)
5. சோம்பலில்லாமல் - சுறுசுறுப்பாக (Actively)
6. ஆலோசனை - அறிவுரை (Advice)
7. தூற்றிக்கொள் - பயன்படுத்திக்கொள் (Using)
8. மடமை - புத்திக்கூர்மையில்லாமை (Foolishness)

**P5 & P6 BEST COMPANION TO SCORE HIGH IN COMPREHENSIONS**
**தொடக்கநிலை 5 & 6 சிறப்புத் தேர்ச்சிக்கான கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் & சுயவிடைக் கருத்தறிதல் பயிற்சித்தாள்**

## விடைகள் - கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

**கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் 1 - பொங்கல் தினம்**

30. 4
31. 3
32. 1
33. என் பள்ளியில் நடைபெற்ற பொங்கல் கொண்டாட்டத்தில் நான் பங்குபெற்றேன். அதில் பொங்கல் வைக்கும் போட்டி, கரும்பு உண்ணும் போட்டி, தோரணம் கட்டும் போட்டி போன்றவை நடைபெற்றன. கலந்து கொண்ட அனைவரும் பாரம்பரிய உடையணிந்து வந்திருந்தனர். போட்டிகளில் வெற்றி பெற்ற அனைவருக்கும் நற்சான்றிதழ்கள் கொடுக்கப்பட்டன.

**கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் 2 - இலவச மருத்துவ முகாம்**

30. 1
31. 2
32. 1
33. இம்முகாமில் கலந்து கொண்டு நான் நீரிழிவு, இரத்த அழுத்தம் இரண்டிற்குமான பரிசோதனைகளை மேற்கொள்ளப் போகிறேன். என் குடும்பத்தில் சிலருக்கு இந்நோய்கள் இருப்பதால் முன்னெச்சரிக்கையாக இப்பரிசோதனைகளை மேற்கொள்ள விரும்புகிறேன்.

**கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் 3 - இளம் அறிவியலாளர் போட்டி**

30. 2
31. 3
32. 4
33. நாங்கள் இப்போட்டியில் 5 பேர் கொண்ட ஒரு குழுவாக பங்கு பெற்றோம். முதலில் நாங்கள் எங்களின் குழுவைப் பதிவு செய்தோம். அதன் பிறகு எங்களுடைய கண்டுபிடிப்பைக் காட்சிக்கு வைத்து வந்திருந்த பிரமுகர்களுக்கு 10 நிமிடங்களுக்குள் விளக்கினோம். எங்கள் குழு வெற்றி பெற்று எங்களுக்குப் பரிசும் கிடைத்தது.

**கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் 4 - இலவச கோலப் பயிற்சி**

30. 2
31. 3
32. 3
33. இவ்வகுப்பில் கலந்து கொள்வதால் கோலம் போடும் ஆற்றலைப் பெறுவேன். அதுமட்டுமின்றி, எனக்கு கோலம் போடுவதில் நாட்டம் அதிகம் உண்டு. ஆகையால், இதில் கலந்து கொண்டு என்னுடைய கோலம் போடும் கலையைச் செம்மைப் படுத்திக் கொள்ள முடியும். நான் என் நண்பர்களையும் இதில் கலந்து கொள்ள வைத்து நம் கலாச்சாரத்தை வளர்க்க முயல்வேன். இவையே இவ்வகுப்பில் கலந்து கொள்வதால் கிடைக்கும் நன்மைகளாகும்.

## விடைகள் - சுயவிடைக் கருத்தறிதல்

### சுயவிடைக் கருத்தறிதல் 1

Q34 பெரிய மீன்கள், நண்டு, தவளை போன்றவைகளிடம் அக்கரைக்குச் செல்ல தேள் முதலில் உதவி கேட்டது.

Q35 பொல்லாத தேள் தம்மைக் கொட்டிவிடும் என்பதனால் மற்ற விலங்குகள் தேளுக்கு உதவவில்லை.

Q36 தேள் இதற்கு முன் ஆமையைக் கொட்டியதில்லை. ஆதலால் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஆமையைக் கொட்டி அது துன்புறுவதைக் காண விரும்பியதே தேள் ஆமையைக் கொட்டியதன் காரணம் ஆகும்.

Q37 ஆமையின் முதுகு கடினமான ஓட்டினால் மூடப்பட்டுள்ளது. அதனால் தேள் ஆமையைக் கொட்டும் போது ஆமைக்கு வலிக்கவில்லை. இவ்வாறு தேள் கொட்டும்போது ஆமை தன்னைப் பாதுகாத்துக் கொண்டது.

Q38 தேள் ஆமையின் கழுத்துப் பகுதியில் கொட்டியது. தலையில் ஏதோ குத்தியதால் ஆமை விடுக்கென்று தலையைத் தண்ணீரின் உள்ளே இழுத்துக் கொண்டது. இதனால் ஆமையின் முதுகில் அமர்ந்திருந்த தேள் நீரோடையில் விழுந்து இறந்தது.

Q39 கெடுவான் கேடு நினைப்பான் என்ற பழமொழி, பிறருக்குத் தீங்கு விளைவிக்க எண்ணம் கொண்டால் நமக்கே தீங்கு விளையும் என்பதை உணர்த்துகிறது.

Q40 நமக்கு நன்மை செய்பவர்களுக்கு நாம் என்றும் உண்மையானவராக நடந்து கொள்ள வேண்டும். அவர்களுக்குத் தீங்கு நினைத்தால் நமக்கே அந்தத் தீங்கு வந்து சேரும். முடிந்தவரை நமக்கு நன்மை செய்பவருக்குத் திரும்ப நல்லதைச் செய்ய முயற்சி செய்ய வேண்டும். அவர்களுக்கு நாம் தீங்கு எண்ணும் போது அது பல மடங்காக நம்மிடமே வந்து சேரும். (அல்லது ஏற்புடைய பதில்கள்)

### சுயவிடைக் கருத்தறிதல் 2

Q34 மாடு காட்டுப்பகுதியில் புல் மேய்ந்து கொண்டிருந்த போது ஒரு பொந்தில் வசித்த வந்த எலியுடன் பேச ஆரம்பித்தது. எலியும் மாடும் பழகியதுடன் சிறந்த நண்பர்கள் ஆயின. .

Q35 தான்தான் மாட்டை வழி நடத்திச் செல்ல வேண்டும் என்றும் பல சண்டைகளில் பலரை வீழ்த்தியிருப்பதாகவும் எலி மாட்டிடம் தம்பட்டம் அடித்துக் கொண்டது.

Q36 எலியின் கண்ணுக்கு எதிரே ஆறு தென்பட்டதால் அதைக் கடப்பது கடினம் என்பதால் திடீரென்று நின்றுவிட்டது.

Q37 எலியின் கண்ணுக்குக் கால்வாய் நதியைப் போன்று வெள்ளப்பெருக்குடையதாகத் தெரிந்ததாலும் அதைத் தன்னால் கடக்க முடியாது என்பதால் எலி மாட்டின் உதவியை நாடியது.

Q38 எலியின் உருவம் சிறியதாக இருப்பதால் கால்வாயைக் கடக்கும்போது அந்தக் கால்வாய் அதற்கு பார்ப்பதற்கு மிகப்பெரியதாக இருக்கிறது. எனவே 'எனக்கு' என்னும் சொல் உருவத்தில் சிறியதான எலியை குறிக்கிறது.

Q39 மாடு கால்வாயில் நின்றபோது நீரோட்டத்தின் அளவு அதன் முழங்கால் அளவு கூட இல்லை. அதைக் கண்டபோதுதான் எலி தன் கர்வத்தை உணர்ந்தது.

Q40 வீண் பெருமை பேசுவதால் நமக்கு இழிவு ஏற்படும். வீண் பெருமை பேசுபவர்களிடம் யாரும் பழக விரும்பமாட்டார்கள். மேலும், வீண் பெருமையில் பொய் கலந்திருப்பதால் நம்பிக்கையுடன் யாரும் நம்மிடம் பழக விரும்பமாட்டார்கள். (அல்லது ஏற்புடைய பதில்)

### சுயவிடைக் கருத்தறிதல் 3

Q34 அரிசி ஒன்றை எடுத்துக் கொண்டு ஒரு எறும்பு சென்று கொண்டும் ஒரு வெட்டுக்கிளி இங்கும் அங்கும் குதித்துப் பாட்டுப்பாடி ஆடிக்கொண்டும் இருந்தது.

Q35 இன்னும் சில நாட்களில் மழைக்காலம் தொடங்கினால் வெளியே செல்ல முடியாது என்பதால் அந்த நேரத்திற்குத் தேவையான உணவை இப்போதே சேகரித்து வைத்துக் கொள்வதற்காக எறும்பு வெட்டுக்கிளியின் அழைப்பை நிராகரித்தது.

Q36 எறும்பு இரை தேடி செல்லும் போதெல்லாம் வெட்டுக்கிளி எறும்பைப் பார்த்து சிரித்தது. வாழ்க்கையை வாழ தெரியாத எறும்பு என்றும் தன் நண்பர்களிடமும் கூறிக் கேலி செய்தது.

Q37 வெட்டுக்கிளிக்கு உணவு எதுவும் கிடைக்காமல் மழையில் சுற்றித் திரிந்தும் பசியில் கடுமையாக வாடியும் எறும்பிடமே உணவு கேட்கும் நிலைக்கு வந்துவிட்டது. இவ்வாறு மழைக்காலம் வந்ததும் வெட்டுக்கிளி கஷ்டப்பட்டது.

Q38 எறும்பு தன்னிடம் இருந்த சிறிதளவு உணவை வெட்டுக்கிளியிடம் கொடுத்து இனி சோம்பல் இல்லாமல் வெயில் காலத்திலேயே உணவைச் சேகரித்துக் கொள்ள வேண்டும் என்ற அறிவுரையையும் கூறி பசியில் வாடிய வெட்டுக்கிளிக்கு உதவியது.

Q39 எறும்பிடமிருந்து உணவு பெற்ற வெட்டுக்கிளி தன்னுடைய முட்டாள்தனத்தை எண்ணி மிகவும் வருந்தி, இனி காலம் நேரம் பார்க்காமல் உழைத்தால்தான் எதிர்காலத்தில் மகிழ்ச்சியாக வாழ முடியும் என்று எண்ணி மழைக்காலம் முடிந்தவுடன் எறும்புடன் சேர்ந்து உணவைச் சேகரிக்கக் கிளம்பியது.

Q40 அந்த எறும்பு கூறியதைப் போல வெட்டுக்கிளி கேட்டு அப்பொழுதே உணவு சேகரிக்கச் சென்றிருந்தால் மழைக்காலத்தில் பசியால் வாடியிருந்திருக்காது. உணவு தேடி மழையில் நனைந்திருக்காது. எறும்பிடம் சென்று உணவு கேட்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்காது. (அல்லது ஏற்புடைய பதில்கள்)

### சுயவிடைக் கருத்தறிதல் 4

Q34 நீண்ட நாள் உணவு உண்ணாத பருந்திற்கு புறாக்களைப் பார்த்ததும் அவற்றை உண்ண வேண்டும் என்ற எண்ணம் வந்தது. அதனால், ஏதேனும் ஒரு புறா வருகிறதா என்பதை எதிர்பார்த்து நீண்ட நேரமாக மறைந்து நின்றது.

Q35 புறாக்கள் எப்போதும் ஒற்றுமையாக இருந்ததால் பருந்துக்கு எதிர்பார்த்த வண்ணம் இரை சிக்கவில்லை. அதனால் பருந்து புறாக்களை ஏமாற்றித் தந்திரத்தால் வெல்ல வேண்டும் என்று நினைத்தது.